# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 மாசி 19 வியாழக்கிழமை (02 - 03 - 2000) VALAMPURI ஒலி: 74


## ★ கொழும்பில் அரசைக் கண்டித்து

# ரணில் தலைமையில்

# ஆர்ப்பாட்டப்பேரணி!

## போக்குவரத்து ஸ்தம்பிதம்

(கொழும்பு)

புதிய அரசியல் அமைப்பு திருத்தத்தின் மூலம் ஜனாதிபதியின் அதிகாரத்தையும், பிரதமரின் அதிகாரத்தையும் ஒருவரே தக்க வைத்திருப்பதனால் அது சர்வாதிகார ஆட்சிக்கு வழி கோலுவதாக அமையும் எனவும்,

இத்தகைய சர்வாதிகார ஆட்சி ஏற்படுவதை கண்டிக்கும் முகமாகவே இவ் ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டது.

இவ் ஆர்ப்பாட்டப் பேரணிக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, கட்சியின் செயலாளர் காமினி அத்துக்கோறள ஆகியோர் தலைமை வகித்தனர்.

அரசியல் அமைப்புத் திட்டத்தில் பிரதமரின் அதிகாரத்தையும் ஜனாதிபதியின் அதிகாரத்தையும் ஒருவரிடம் ஒப்படைப்பது தொடர்பான அம்சங்கள் இடம் பெறுவதை ஆட்சேபித்து ஐ. தே. கட்சி கொழும்பு பம்பலப்பிட்டியில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தியது.

எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமானரணில் விக்கிரமசிங்காதலைமையில் நடைபெற்ற இப் பேரணியில் ஐ.

[6 ஆம்பக்கம் பார்க்க]

## புலிகள் தரப்பில் நால்வர் உயிரிழப்பு

[வவுனியா]

அண்மையில் வாடியடி மற்றும் அம்பாறைப் பிரதேசங்களில் இடம் பெற்ற இரு வேறு தாக்குதல் சம்பவங்களில் தமது தரப்பில் நால்வர் உயிரிழந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் பெயர் விபரம் வருமாறு:

இரண்டாம் லெப்டினன்ட்களான

★ கண்ணன்

(கேசவப்பொடி கண்ணன்)

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புறக்கோட்டைப்பகுதி சுற்றிவளைப்பு 22 தமிழ்இளைஞர்கள் கைது!

(கொழும்பு)

புறக்கோட்டைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று அதிகாலை வரை சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்திய பொலிசார் 22 தமிழ் இளைஞர்களை கைது செய்து விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானோர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் பிஸ்ரல்குழுவின் சூட்டுக்கு ஒருபொலிஸ்காயம்

(வவுனியா)

மன்னார் பொலிஸ் நிலைய நாசகார ஒழிப்புப் பிரிவு புலனாய்வு அதிகாரி ஒருவர் நேற்று 7.00 மணியளவில் மன்னார் நகருக்கு அண்மையில் வைத்துச்சுடப்பட்டார்.

ஜெயசிறி என்ற மேற்படி பொலிஸார் ஆபத்தான

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மலசலகூடத்திலிருந்து மீட்கப்பட்ட எலும்புக்கூடு மனிதனுடையதா?

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை நெடிய காட்டுப் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் சிற்ப ஆசாரியார் வீட்டு மலசல குழி ஒன்றுள் நேற்றுமாலை 5.00மணியளவில் எலும்புக் கூடு ஒன்று கண்டுபிடிக்கப் பட்டது.

நேற்றுமாலை 5.30மணியளவில் பருத்தித்துறை

(6 ஆம் பக்கம் பார்க்க)

### திருமலை காங்கேசன் கப்பல்சேவை

## குறைந்தகட்டணத்தை வசூலித்தால் ஐ.சி.ஆர்.சி. வழித்துணை வழங்கும்

(கொழும்பு)

திருமலைக்கும் காங்கேசன் துறைக்குமானபயணிகள் கப்பல் சேவை ஆரம்பிப்பது தொடர்பாக கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற மாநாட்டில் வியாபார நோக்கமின்றி குறைந்த கட்டணத்துடன் பயணிகள் சேவை நடத்தினால் மட்டுமே சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வழித்துணை வழங்கும் என தெரிவித்துள்ளது.

இம் மாநாட்டில் கப்பல் கூட்டுத்தாபனத் தலைவர் லங்காராணி கப்பல் உரிமையாளர் சிற்றிஒவ்றிங்கோ கப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### பருத்தித்துறையில் சம்பவம்

## வீசிய கிரனேட் வெடிக்காததால் பிர. தலைவர் உயிர் தப்பினார்

(புலோலி)

பருத்தித்துறைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு வீசப்பட்ட கிரனேட் வெடிக்காததால் பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் அதிஸ்டவசமாக உயிர்தப்பினார்,

இரவு 7.30 மணியளவில் பருத்தித்துறைப் பிரதேச சபைத் தலைவர் ஐ. ஸ்ரீரங்கேஸ்வரனும் கரவெட்டி சமுர்த்தி அலுவலரும் கதைத்துக் கொண்டிருந்த போது

(6 ஆம் பக்கம் பார்க்க)

### ★ வயோதிபமாதின் சடலத்தை

## உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி

## மருத்துவபீடத்திற்கு நீதிபதி உத்தரவு

கடந்த 19ஆம் திகதி யாழ். போதனாவைத்தியசாலையில் மரணமான சதாசிவம் சின்னத்தங்கச்சி (77வயது) என்ற பெண்ணின் சடலத்தை உறவினர்களிடம் கையளிக்க யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி மறுத்தது தொடர்பான மனு மீதான விசாரணை நேற்று யாழ். நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

ஒருவர் வைத்தியசாலையில் இறந்தால் உறவினர் எவரும்

(6ஆம் பக்கம் பார்க்க)

## இருபாலையில் ஒருவர் சுட்டுக்கொலை

[கட்டைப்பிராய்]

பருத்தித்துறை வீதி இருபாலை மாதாகோவிலுக்குப் பின்புறமாகவுள்ள வெற்றுக் காணியொன்றில் வைத்து இனந்தெரியாத நபர்களால் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்றுக் காலை 9 மணியள

(6ஆம் பக்கம் பார்க்க)

## திருநெல்வேலி பஸ் விபத்து வயோதிபர் படுகாயம்!

திருநெல்வேலிப் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற வீதிவிபத்தில் துவிச்சக்கர வண்டியில் சென்ற நபர் தலையில் படுகாயம் அடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ். மாநகரசபைப் பகுதியில் கடமையாற்றும் அ. அருளம்பலம் (வயது 56) என்பவரே காயமடைந்தவராவர்.

பஸ்கட்டுப்பாடிழந்து சம்பந்தப்பட்ட நபருடன் மோதியதாகக் கூறப்படுகின்றது. (வ-3)

## ஷெல் வீழ்ந்து வெடித்ததில் பத்துப் பொதுமக்கள் காயம்

(யாழ்ப்பாணம்)

தனங்களப்பு வயல் வெளியில் நெல் அறுவடையில் ஈடுபட்டிருந்த தொழிலாளர் திடீரென வயல் வெளியில் விழுந்து வெடித்த ஷெல்லினால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட 10 பேர் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தனங்களப்பு நாச்சிமார் கோவில் பின்புறமாக இராணுவக் காவலரண் பகுதியில் உள்ள வயல் வெளியிலேயே நேற்றுக் காலை 11.30 மணியளவில் வீழ்ந்து வெடித்துள்ளது.

இச் ஷெல் வீச்சில் காயப்பட்டோர் விபரம் வருமாறு:

கந்தையா தேவராசா (வயது 23) சாவகச்சேரி,

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வெளிவாரி பட்டப்படிப்பு அலகு அலுவலகம் முல்லைத்தீவில் நிறுவவும்

### முல்லை மாணவர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேச மாணவர்களின் நலன் கருதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டப்படிப்புகள் அலகின் தொடர்பு அலுவலகம் ஒன்றினை முல்லைத்தீவில் நிறுவுவதன் மூலம் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அங்கு நடைபெற வழி செய்யுமாறு துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையிடம் முல்லைத்தீவு மாண

(6ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நீண்டகால இடைவெளிக்குப் பின் கைதடிப்பகுதிக்கு மின் விநியோகம்

[தென்மராட்சி]

ஒன்பது வருட காலஇடைவெளியின் பின்னர் கைதடி பிரதேசத்துக்கு நேற்று முதல் இலங்கை மின்சார சபை 24 மணிநேர மின் விநியோகத்தை ஆரம்பித்துள்ளது.

இலங்கை மின்சார சபையின் வடபிராந்திய பொது முகாமையாளர் திரு. ஆர். முத்துரத்னானந்தம் தலைமையில் நடைபெற்ற மின்சாரம் வழங்கல் வைபவத்தின் போது இலங்கை மின்சார சபையின் மாகாண கட்டமைப்பு பொறியியலாளர் திரு. வி. வேலுப்பிள்ளை மின்விநியோகத்தை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இவ்வைபவத்தின் போது சாவகச்சேரி மின் அத்தியட்சகர் திரு. எஸ். சடாச்சரமூர்த்தி உதவி மின்பொறியியலாளர் திரு. எஸ். பத்மநாதன் தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் திரு. எஸ். சுப்பிரமணியம் உட்பட மின்சாரசபை ஊழியர்களும் பங்குகொண்டிருந்தனர்.

இந்த மின் விநியோகம் பகல் வேளையில் தினசரி வழங்கப்படும் எனவும் இரவு நேர மின் விநியோகம் ஒன்று விட்ட ஒரு நாளைக்கே வழங்கப்படும் எனவும் அறியப்படுகின்றது.

கைதடி பிரதேசத்திலுள்ள வீடுகளுக்கான மின்விநியோகம் படிப்படியாக வழங்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் தெரியவருகின்றது.

(க-77)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர்

யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களுக்கு இம்மாதம் 01 ஆம் திகதிவரை பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாகத் தரப்படுகின்றது.

### சாவகச்சேரி

| | |
|---|---|
| 123332 ஏ | 123332 பி |
| 126397 ஏ | 126397 பி |
| 126397 சி | 126436 ஏ |
| 126498 ஏ | 127896 பி |
| 127896 சி | 127896 டி |
| 127896 ஈ | 127986 ஏ |
| 129853 ஏ | 129857 ஏ |
| 129857 பி | 129857 சி |
| 129954 ஏ | 131257 ஏ |
| 131258 ஏ | 131272 ஏ |
| 131272 பி | 131402 ஏ |
| 131402 பி | 131402 சி |
| 131403 ஏ | 131404 ஏ |
| 131404 பி | 131404 சி |
| 131405 ஏ | 131407 ஏ |
| 131409 ஏ | 131409 பி |
| 131409 சி | 131414 ஏ |
| 131421 ஏ | 137382 ஏ |
| 137382 பி | 137394 ஏ |
| 137394 பி | 137395 ஏ |
| 137395 பி | 137395 சி |
| 137395 டி | 137395 ஈ |
| 137397 ஏ | 137400 ஏ |
| 137400 பி | 137401 ஏ |
| 137404 ஏ | 137404 பி |
| 137404 சி | 137408 ஏ |
| 137408 பி | 137408 சி |
| 137410 ஏ | 137410 பி |
| 137411 ஏ | 137411 பி |
| 137412 ஏ | 137412 பி |
| 137417 ஏ | 137417 பி |
| 137419 ஏ | 137419 பி |
| 137422 ஏ | 137427 ஏ |
| 137429 ஏ | 137434 ஏ |
| 137434 பி | 137434 சி |
| 137437 ஏ | 137437 பி |
| 137437 சி | 137440 ஏ |
| 137440 பி | 137444 ஏ |
| 137445 ஏ | 137445 பி |
| 137450 ஏ | 137454 ஏ |
| 137454 பி | 137457 ஏ |
| 137462 ஏ | 137463 ஏ |
| 137464 ஏ | 137464 பி |
| 137469 ஏ | 137469 பி |
| 137472 ஏ | 137473 ஏ |
| 137474 ஏ | 137474 பி |
| 137474 சி | 137476 ஏ |
| 137476 பி | 137501 ஏ |
| 137503 ஏ | 137509 ஏ |
| 137510 ஏ | 137510 பி |
| 137511 ஏ | 137511 பி |
| 137511 சி | 137517 ஏ |
| 137520 ஏ | 137520 பி |
| 135466 ஏ | |

### கரவெட்டி

| | |
|---|---|
| 129608 ஏ | 129608 பி |
| 130953 ஏ | 131173 ஏ |
| 135042 ஏ | 135188 ஏ |
| 135216 ஏ | 135237 ஏ |
| 135253 ஏ | 135253 பி |
| 135253 சி | 135393 ஏ |

### பருத்தித்துறை

| | |
|---|---|
| 127750 ஏ | 127750 பி |
| 130986 ஏ | 131004 ஏ |
| 131152 ஏ | 132705 ஏ |
| 135022 ஏ | 135079 ஏ |
| 135079 பி | 135079 சி |
| 135079 டி | 135185 ஏ |
| 135191 ஏ | 135191 பி |
| 135228 ஏ | 135261 ஏ |
| 135266 ஏ | 135266 பி |
| 135275 ஏ | 135335 ஏ |
| 135400 ஏ | 135401 ஏ |
| 135415 ஏ | 135416 ஏ |

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(கோப்பாய்)

அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலை வருடாந்த இல்லவிளையாட்டுப்போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் இடம்பெறவுள்ளது.

கல்லூரிஅதிபர் குணநாதன் தலைமையில் நடைபெறும் மேற்படி நிகழ்வில் யாழ். வலய திட்டமிடல் உதவிக் கல்விப்பணிப்பாளர் நா.வரதராசன்பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார்.

★ ★ ★

(யாழ்ப்பாணம்

சங்கானைக் கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமைபி.ப. 1:30மணிக்கு யா/வட்டுக் கோட்டை யாழ்ப்பாண கல்லூரிமைதானத்தில் நடைபெறவுள்ளது.

சங்கானைக்கல்விக்கோட்ட உதவிக்கல்விப்பணிப்பாளர் சி.செல்லையா தலைமையில் நடைபெறும் இப்போட்டிக்கு வடக்கு-கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் க.கந்தசாமி பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்கிறார்

(செ)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

யா/ வாதரவத்தை விக்னேஸ்வா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக் கிழமை பி.ப. 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் செ.சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறும் இப் போட்டிக்கு கோப்பாய் பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் ஆ.கதிரமலைநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

(செ)

★ ★ ★

(கோப்பாய்)

கோப்பாய் சரவணபவானந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பி.பகல் 1.30 மணியளவில் இடம்பெறும்.

கல்லூரி அதிபர் நா.சண்முகரத்தினம் தலைமையில் நடைபெறும் மேற்படி நிகழ்வில் யாழ்ப்பாண வலய கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ். மகாலிங்கம் பிரதமவிருந்தினராகவும், வைத்திய கலாநிதி ஆ.தியாகராஜா கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வார்.

(க-79)

★ ★ ★

நீர்வேலி சி.சி.த.க. பாடசாலையில் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் அதிபர் க. இ. இராசசேகரம் தலைமையில் நடைபெற உள்ளது.

பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி ஞா. தெய்வேந்திரராசா முதன்மை விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

(க-79)

யாழ். பல்கலையில்

## தாமரை வடிவ அரங்கில் விரிவுரைகள் களைப்படையாத நிலையில் மாணவர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நடனத்துறையில் புதிதாகத் திறக்கப்பட்ட தாமரைவடிவ அரங்கில் தற்போது விரிவுரை வகுப்புக்களும், ஆற்றுகை வகுப்புக்களும் நடைபெற்று வருகின்றன. இலங்கையின் எந்தப் பல்கலைக்கழகத்திலும் இவ்வகையான மண்டப அமைப்பைக் காணமுடியாது.

நாற்புறமும் நீராற்சூழப்பெற்ற இவ்வரங்கு வட்ட வடிவில் தாமரைபோன்று அமைந்துள்ளது. நாற்புறமும் அமைக்கப்பட்ட பாலங்களின் வழியாக மாணவர்கள் உள்ளே சென்று ஆற்றுகையில் ஈடுபடுகின்றனர். யாழ்ப்பாணத்துக் காலநிலைக்கு பொருந்தக்கூடியதாக அமைக்கப்பட்ட இத்தாமரை அரங்கில்பயிற்சி செய்யும் பொழுது மாணவர்கள் எளிதிலே களைப்படைந்து விடுவதில்லை என விரிவுரையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

(க)

## கிரிக்கெட் போட்டி

(மானிப்பாய்)

சென்பற்றிக்ஸ், சென் ஜோன்ஸ் கல்லூரிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டி நாளையும், நாளை மறுதினமும் பி.ப. 1·30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக் கிரிக்கெட் போட்டி சென். பற்றிக்ஸ் மைதானத்தில் இடம் பெறும்.

(செ)


தையிட்டி

கணையவிற் பிள்ளையார் கோயில்

முக்கிய அறிவித்தல்

மேற்படி கோயில் புனருத்தாரன பணிகள் செய்வதற்காக புனருத்தாரன தொண்டர் சபை அமைப்பதற்கு 11.03.2000-ம் ஆண்டு சனிக்கிழமை மாலை 2.30 மணியளவில் மல்லாகம் பழம்பிள்ளையார் கோயில் மண்டபத்தில் கூட்டம் கூட்டப்படுகிறது கணையவிற் பிள்ளையார் கோயில் உபயகாரர்கள் வழிபடுவர்கள் அனைவரும் தவறாது சமூகம் தந்து ஒத்துழைக்குமாறு. அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

இங்ஙனம்

சண்முகநாதன் சயந்தன்.

கோயில் முகாமையாளர்

01.03.2000 (00202)


## நாடக அரங்கேற்றம்

(நெடுந்தீவு)

சென். ஜோன்ஸ் இயல் இசை நாடக மன்றம், ''ஞான சௌந்தரி'' எனும் இசை நாடகத்தை எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நெடுந்தீவு மத்தி புனித யுவானியார் ஆலய தியோகு அரங்கில் மேடையேற்றவுள்ளது.

(க-82)

## மகாசிவராத்திரி

(புலோலி)

புலோலி மூச்சம் பல சிவன் ஆலயத்தில் 4-ம் திகதி மகா சிவராத்திரி விழா நடைபெறுகின்றது.

ஆலய பிரதமகுரு சிவத்திரு இலஷ்மணன் ஐயரால் பிற்பகல் 6 மணிக்கு முதலாம் சாமப்பூசை நடைபெறும். அதனைத்தொடர்ந்துபுராண படனம் இடம்பெறும்.

(க-52)

## பொதுமக்கள் சிரமம்

கொடிகாமம் நகர்ப்பகுதி கண்டி வீதியின் குறுக்காக மழை வெள்ளம் தேங்குவதனால் பொதுமக்களும் வாகனங்களும் போக்குவரத்திற்குபெரும் சிரமத்தைஎதிர் நோக்குவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்படுவதாவது.

வீதியின் இரு மருங்கிலும் உள்ள கடை உரிமையாளர்கள் தமது கடைகளுக்கு முன்பாக மண் நிரப்பி மேடை அமைத்திருப்பதனால்வெள்ள நீர் வீதியிலிருந்து வடிந்தோட முடியாது தேங்கி நிற்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

[க-59]

## ஆறுமுகம் தொண்டமானுக்கு புதிய அமைச்சு

[கொழும்பு]

அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானுக்கு அவர் பொறுப்பு வகிக்கும் கால்நடை அபிவிருத்தித் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சுடன், தோட்ட வீடமைப்புத்துறையும் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

[வ]

## யாழ். மாநகர சபைக்கு கணக்காளர் இருவர் நியமனம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு இரண்டுபுதிய கணக்காளர்கள் நியமனம்பெற்றுள்ளனர். மாநகரசபையின் பிரதம கணக்காளராகவிருந்த க.தனரஞ்சிதராஜன், யாழ்ப்பாணத்திலுள்ள மாகாண சுகாதார பிரதிப் பணிப்பாளர் பணிமனைக்கு நியமனம் பெற்றுச் செல்கிறார்.

அங்கு கணக்காளராகவிருந்த சு. சண்முகரட்ணம் யாழ். மாநகரசபைக்கு பிரதம கணக்காளராக நியமனம் பெறுகிறார்.

இதேவேளையில் மாகாண அரச நியமனமாக திரு.சி. உமாமகேசன் என்பவரும் யாழ். மாநகரசபைக்கு கணக்காளராக நியமனம் பெற்றுள்ளார். இதன் மூலம் யாழ். மாநகர சபையில் இருக்கும் இரு கணக்காளருக்கான பதவிகளும் நிரப்பப்படுகின்றன.

இதற்கு முன்னர் யாழ். மாநகரசபையின் கொள்வனவு-களஞ்சியப்பகுதிக்கு ஒரு பதில் கணக்காளர் நியமிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது, [வ-சு]

## (இராசி பலன்)

02.03.2000

வியாழக்கிழமை

(தமிழுக்கு மாசி - 19)

ஏகாதசி காலை 7.28 வரை, பின் துவாதசி உத்தராடம் உதயம் 3.23 வரை, சித்தயோகம் இராகுகாலம் பகல் 2.28 முதல் 3.57வரை, சுபநேரம் காலை 8.26 முதல் 9.53 வரை.

**மேடம்:** உறவினர் ஆதரவு, மன மகிழ்ச்சி, காரியசித்தி.

**இடபம்:** முதியோர் கவலை, மனக் குறை, அநாவசிய செலவு.

**மிதுனம்:** தொழில் துன்பம், வசதிக் குறைவு, கணவர் சிந்தனை.

**கடகம்:** சாதனைமுயச்சி, காரிய சித்தி, விருந்துண்ணல்.

**சிங்கம்:** பிறர் உதவி, வாதத் திறமை, சாஸ்திர ஆராய்ச்சி.

**கன்னி:** அபவாதம், குருவெறுப்பு, உடல் உபாதை.

**துலாம்:** குழம்பித்தெளிதல், குடும்ப கவலை, கடன்பகை.

**விருச்சிகம்:** நிதி உதவி, வாகனசுகம், பதவி உயர்வு.

**தனுசு:** காரியதாமதம், பெண் குழப்பம், அவமதிப்பு.

**மகரம்:** வரவேற்பு, பணவகை உற்சாகம், புத்திரர் பெருமை.

**கும்பம்:** ஏமாற்றப்படல், சகோதரர் வெறுப்பு, வைத்திய செலவு.

**மீனம்:** ஊதிய உயர்வு, சுபகாரியம், அனுகூலச் செய்தி.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

-அனுஷியா

## புதிய லொறி கொள்வனவு

(புலோலி)

பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் சுமார் 12 இலட்சம் ரூபாவுக்குப் புதிய லொறி யொன்றைக் கொள்வனவு செய்துள்ளது புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு வழங்கிய கடன் நிதியிலேயே இப்புதிய லொறி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. தற்போது இந்த லொறிக்கான உடற் கோப்பு நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

இப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஏற்கனவே லொறி ஒன்று இருக்கின்றது. இவ்விரு லொறிகளும் சேவையிலீடு படுத்தப்படும் போது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் செயற்பாடுகள் இலகு படுத்தப்படுவதுடன் பாவனையாளர்களும் நன்மையடைவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(சு)

மட்டு. இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில்

# நோர்வே அரசின் திட்டம் செயல்படுத்த பாதுகாப்பு அமைச்சு அனுமதி!

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளிலும் இவ்வாண்டு நோர்வே அரசின் உதவித் திட்டமான 'டோபாத்' திட்டம் நடைமுறைப்படுத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதற்கான அங்கீகாரம் மட்டக்களப்பு மாவட்ட எம்.பியும் தபால் தொலைத் தொடர்புகள், தொடர்பு சாதன பிரதி அமைச்சருமான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா பெற்றுக் கொடுத்துள்ளார்.

இது தொடர்பான உயர்மட்ட பாதுகாப்பு மாநாடு ஒன்று அமைச்சரின் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அலுவலகத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சோமபால வட-கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஜி. கிஷ்ணமூர்த்தி மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் ஏ. கே. பத்மநாதன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் உட்பட பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

[க-60]

## மட்டக்களப்பில் விரைவில் நடமாடும் சிறுவர் நூலகம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட மாநகரசபை பிரதேசத்தில் யுனிசெவ் உதவியுடன் நடமாடும் சிறுவர் நூலகம் நடாத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதற்கான வாகனத்தினை சுவீடன் அரசு வழங்கியுள்ளது.

20 லட்சம் ரூபா பெறுமதியான இந்நூலகம் மட்டக்களப்பிற்கு வந்து சேர்ந்ததாக மட்டக்களப்பு மாநகர சபை அதிகாரி எஸ். நவநீதன் தெரிவித்துள்ளார்.

இந்நூலகத்திற்கு ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இந்நடமாடும் நூலகம் விரைவில் மாவட்ட ரீதியாக விஸ்தரிக்கப்படும் எனவும் மாநகரசபைவட்டராம் தெரிவித்தது.

(க-60)

## ஆசிரியர்களுக்குத் தாய்லாந்தில் பயிற்சியளிக்கும் திட்டம் விரைவில்

(கொழும்பு)

ஆசிரியர் மற்றும் போதனாசிரியர்களுக்குத் தாய்லாந்தில் பயிற்சியளிக்கும் திட்டம் ஒன்று விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இது தொடர்பான ஒப்பந்தத்தில் இலங்கை, தாய்லாந்து நாட்டு உயரதிகாரிகள் அண்மையில் கைச்சாத்திட்டனர்.

கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரனா அண்மையில் மேற்கொண்ட தாய்லாந்து விஜயத்தின் அனுபவங்களின் அடிப்படையில் மேற்படி திட்டம் அமுல் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப்பயிற்சித் திட்டங்களிற்கான அனைத்துச் செலவுகளையும் உலகவங்கி வழங்க முன் வந்துள்ளது.

இதேசமயம்—

பயிற்சிகளைப் பெறும் பொருட்டு 15 பேர் அடங்கிய ஆசிரியர் குழு வரும் மே மாதம் தாய்லாந்து புறப்படவுள்ளதாக தெரிய வருகிறது.

## தென்மராட்சியில் கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு கள் விற்பனை குறைவதாக முறைப்பாடு

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்திலுள்ள சாவகச்சேரி, கொடிகாமம் பனைதென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் எல்லைப் பிரதேசங்களில் கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் அதிகரித்துக் காணப்படுவதால் இவ்விரு சங்கங்களின் கூட்டுறவுக் கள் விற்பனை நிலையங்களில் கள் விற்பனை பாதிக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது.

இதன் காரணமாக சீவல் தொழிலில் ஈடுபட்டு வருகின்ற தொழிலாளர்கள் பெரும் நஷ்டத்தை எதிர்நோக்க வேண்டிய நிலை உருவாகி வருகின்றது. அதே வேளை இவ்விரு சங்கங்களும் போதிய வருமானம் இல்லாத நிலையில் இருப்பதாகவும் அறியப்படுகின்றது

இதேவேளை கசிப்பு உற்பத்தி, விற்பனை மற்றும் சட்டவிரோத கள் விற்பனை போன்ற குற்றச் செயல்களைப் புரிபவர்களை கலால் பகுதியினர் திடீர் பரிசோதனைகளை தற்போது அடிக்கடி மேற் கொண்டு வருகின்றனர்.

இந்த திடீர் பரிசோதனைகள மூலம் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்த பலர் இதுவரை கலால் பகுதியினரால் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டதாகவும் தெரிய வருகின்றது. (க-77)

## விசேட கலந்துரையாடல்

(தென்மராட்சி)

யாழ். மாவட்ட ஆரம்ப பிள்ளைப்பருவ மேம்பாட்டுக் குழுவின் கலந்துரையாடல் எதிர்வரும் 6 ஆம்திகதி யாழ். மாவட்ட அரச அதிபர் திரு. க. சண்முகநாதன் தலைமையில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் பாலர் பாடசாலைகளின் தேவைகளை நிறைவு செய்தல் பற்றியும் அரசசார்பற்ற நிறுவனங்களால் முன்பள்ளிகளுக்கு வழங்கப்படும் உதவிகளை ஒருங்கிணைத்தல் பற்றியும் ஆராயப்படும் என உள்ளூராட்சி உதவி ஆணையாளரும் இணைப்பாளருமான திரு. ரி. வி. கிருஸ்ணசாமி தெரிவித்துள்ளார்.

(க-77)

## சிவராத்திரியும் ஆண்டு விழாவும்

[யாழ்ப்பாணம்]

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீகற்பக விநாயகர் கோயிலில் சிவராத்திரி விழா நாளை மறுதினம் சனிக்கிழமை மேற்படி ஆலய மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

சைவசமய அபிவிருத்திக் கழகத்தினரின் 46 வது ஆண்டு நிறைவு விழாவும் அன்றைய தினம் இடம் பெறவுள்ளதும் இங்குகுறிப்பிடத்தக்கது.

[க]

## சார்ஜா ஒருநாள் கிரிக்கெட் தொடரில் இந்திய அணியின் தலைவராக கங்குலி

(புதுடில்லி)

சார்ஜாவில் நடைபெறவுள்ள 3 நாடுகள் பங்குபற்றும் 5 போட்டி சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடரிற்கு இந்திய அணியின் கப்டனாக சஷ்ரவ் கங்குலி தெரிவு செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

1998 ஆம் ஆண்டு ரொரன்டோவில் நடைபெற்ற சகாரா கிண்ணப் போட்டியின் போது பாகிஸ்தான் அணிக்கு எதிரான போட்டியில் கப்டனாக பணியாற்றியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## கஜகஸ்தானில் வன்முறைக்கு முடிவு

(டுஷான்பே)

கஜகஸ்தான் வன்முறைகளுக்கு முடிவுகாணும் வகையில் அங்கு பாராளுமன்றத்துக்கான ஜனநாயக வாக்கெடுப்பு நடாத்தப்படவுள்ளது. (க-9)

## நைஜீரியாவில் தொடரும் மோதல் இருதினங்களில் 50 பேர் பலி

(கடுனா)

தென்கிழக்கு நைஜீரியாவில் இஸ்லாம், கிறிஸ்தவ மதத்தவர்களுக்கிடையே தொடரும் மோதலில் இரண்டொரு தினங்களில் மட்டும் 50 பேர் வரையில் கொல்லப்பட்டிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வீதிகள் எங்கும் அராஜகம் புரிவோர் நடமாட்டங்களும் அநியாயச் செயல்களும் அதிகரித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இரத்தவெறி கொண்டு இளைஞர்கள் எதிர்ப்புப் போராட்டங்களிலும் கொலைச் செயல்களிலும் கட்டுமீறி ஈடுபட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அநியாயச் செயல்களில் ஈடுபட்டிருப்போர் வீதிகளில் போர்ப்பாடல்களை பாடி ஆடி அட்டகாசம் புரிந்து வருவதாகவும் கூறப்படுகிறது.

[க-9]

## இந்தியன் ஏயார்லைன்ஸ் விமானகடத்தல் தலிபான் தீவிரவதிகளுக்குத் தொடர்பாம்

(புதுடில்லி)

இந்தியன் எயார்லைன்ஸ் விமானக் கடத்தல் சம்பவத்தில் தாலிபானுக்கும் பங்கு இருந்ததாக புதுடில்லி முதன் முறையாக அறிவித்துள்ளது.

விமானக் கடத்தல் காரர்கள் தலிபான் தீவிரவாத அமைப்பான கர்க்கட் மற்றும் பாகிஸ்தானிய முப்படை உளவு அமைப்பான ஐ. எஸ். ஏ. இற்கும் இடையே தொடர்பு இருந்ததாக இந்திய வெளியுறவு அமைச்சர் யஸ்வந் சிங் கூறியுள்ளார்.

விமானக் கடத்தல் காரர்களும், விடுவிக்கப்பட்ட பயங்கரவாதிகளும் ஆப்கானிஸ்தானை விட்டுச் செல்லுவதற்கு 10 மணி நேர அவகாசம் அளித்தது. தலிபானின் சொந்த முடிவுதான் என்று மாநிலங்கள் அவையில் தெரிவித்தார்.

விமானக் கடத்தல் காரர்களும் விடுவிக்கப்பட்ட பயங்கரவாதிகளும் சட்டப்படி குற்றவாளிகளாகக் கருதப்பட வேண்டும் என்று இந்தியா தலிபானிடம் தெளிவுபடக் கூறிய பின்னரும். இவ்வாறு நடந்து கொண்டதாக அமைச்சர் மேலும் கூறினார்.

விமானக் கடத்தல் காரர்களிடமும் அவர்களது ஆதரவாளர்களிடமும் தலிபான் அதிகாரிகள் ஆதரவு காட்டி வந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். (க-5)

## முன்னெப்போதையும்விட இந்தியா பாதுகாப்புக்கென பெருமளவு நிதியை ஒதுக்கியது

### வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு

(புதுடில்லி)

இந்தியா முன்னெப்போதும் இல்லாதவாறு இவ்வருடம் பாதுகாப்புக்கென பெருமளவு நிதி ஒதுக்க வேண்டிய கட்டாய தேவை ஏற்பட்டுள்ளதாக அந்நாட்டு வெளியுறவுத்துறைஅமைச்சர் யஸ்வந்சிங் தெரிவித்துள்ளார்.

இந்தியநாடாளுமன்றத்தில் வரவுசெலவுத் திட்டத்தினை சமர்ப்பித்து உரையாற்றுகையில் வெளியுறவுத்துறை அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் இம்முறை இந்திய வரவுசெலவுத் திட்டத்தில் போர்ச் செலவுகளுக்கென 28.2 வீதம் ஒதுக்கப்பட்டிருப்பது தொடர்பாக அவர் விளக்கமளிக்கையில்,

உலகின் இரண்டாவது மிகப் பெரும் இராணுவமாக இந்திய இராணுவம் விளங்குகிறது.

தாய் நாட்டின் ஒரு அங்குலத்தைக்கூட அந்நியரிடம் விட்டுக் கொடுக்காது அதற்காகப் போராட வேண்டிய கட்டாயத் தேவை எமக்கு உண்டு.

கடந்த வருடம் பாகிஸ்தானுடன் ஏற்பட்ட மோதலின் போது பல புதிய கனரக ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதனாலேயே பாதுகாப்பு நிதியை ஒதுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

(க-9)

## மணிப்பூரில் ஆளும் ஐக்கிய முன்னணி 27 இடங்களை கைப்பற்றியது

(புதுடில்லி)

மணிப்பூர் மாநிலச் சட்டமன்ற தேர்தல் தொகுதிகளில், 5 தொகுதிகள் தவிர 55 தொகுதிகளுக்கான முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதில் ஆளும் ஐக்கிய முன்னணி, 27 இடங்களைக்கைப்பற்றி தனிப்பெரும் பான்மை அணியாக உருவெடுத்துள்ளது.

21 இடங்கள் மணிப்பூர் மாநில காங்கிரஸ் கட்சிக்கும் 6 இடங்கள் அதன் கூட்டுக் கட்சிக்கு கிடைத்துள்ளது.

இருப்பினும் ஆளும் ஐக்கிய முன்னணி மணிப்பூரில் ஆட்சி அமைக்க வேண்டுமாயின் சிறு கட்சிகளின் ஆதரவு பெற்றேயாக வேண்டிய நிலை காணப்படுகிறது.

இதேவேளை—

காங்கிரஸ் தலைமையிலான மதச்சார்பற்ற ஜனநாயக முன்னணி 15 இடங்களில்வெற்றிபெற்றுள்ளது.

(க-9)

## இந்தோனேசிய ஆயுதப் படைகளில் மாற்றத்தை ஏற்படுத்தும் ஜனாதிபதி

(ஜகார்த்தா)

இந்தோனேசிய ஆயுதப் படையில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தும் முயற்சியில் அந்நாட்டு அதிபர் வாஹிட் ஈடுபட்டுள்ளார்.

இவர் தனது பொறுப்பில் உள்ள படையில் உள்ள 50 இற்கும் மேற்பட்ட சிரேஷ்டதர இடைநிலை அதிகாரிகள் தரத்தில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னர் ஆயுதப்படைகளின் தளபதியாகச் செயற்பட்டு பின்னர் பதவி நீக்கம் செய்யப்பட்ட ஜெனரல் வெருண்டோவின் செல்வாக்கு படையினர் மத்தியில் தொடர்ந்தும் நிலவி வருவதையடுத்தே இத்தகைய செயற்பாட்டில் ஜனாதிபதி வாஹிட் ஈடுபட்டுள்ளார்.

[க-வ[

## நிலச்சரிவில் 11 பேர் பலி

[பிறேஸில்]

பிறேஸில் நாட்டில் உள்ள ஸ்ராவ் பாவ்லோ நகரில் கடந்த செவ்வாய்க் கிழமை ஏற்பட்ட நிலச்சரிவில் 11 பேர் அநியாய உயிரிழந்துள்ளனர்.

(க-9)

உலக நாடுகளில் இடம்பெறும்

# கொடூர யுத்தங்களில் சிறுவர்களே பெருமளவில் மரணிக்கின்றனர்

## ஊடகவியலாளர் மொகான்சமரநாயக்க

(கொழும்பு)

உலக நாடுகளில், 1987 ஆம் ஆண்டு தொடக்கம் இடம் பெற்றுவரும் போராட்டங்களில் உயிர் இழந்தவர்களிலும் போரில் ஈடுபட்டு வருபவர்களிலும் அனேகர் இளம் பராயத்தினர் என ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான ஊடகவியல் பேச்சாளர் மொகான் சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

1987 ஆம் ஆண்டில் இருந்து உலக ரீதியில் இடம் பெற்று வரும் உள்நாட்டு வெளிநாட்டு யுத்தங்களில், 18 வயதிற்குட்பட்ட இளம் பிள்ளைகள் சுமார் 2 மில்லியன் வரையில் இறந்துள்ளனர்.

உலகில் உள்ள நாடுகளில் 92 நாடுகள் யுத்தத்தில் ஈடுபட்டுள்ளன. அவற்றில் 89 உள்நாட்டு யுத்தங்களாகும். இரண்டாவது உலகமகா யுத்தம் முடிவடைந்த பின் இடம் பெற்றுவரும் யுத்தங்களில் இதுவரை பலியானவர்களில் 90 வீதமானோர் பொதுமக்களாவர். அதில் 90 வீதமானவர்கள் பெண்களும் குழந்தைகளுமாவர்.

அத்துடன் உலக நாடுகளில் இடம்பெற்றுவரும் யுத்தங்களில் சுமார் 2 மில்லியன் தொடக்கம் 3 மில்லியன் வரையிலான இளம் பராயத்தினர் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர் எனவும் மொகான் சமரநாயக்க தெரிவித்துள்ளார். (க-9)

# முன்பள்ளி சிறுவர்கள் 2 ஆயிரம் பேருக்கு மாதாந்தம் போஷாக்கு உணவு வழங்கல்

வலிகாமம்பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி வலிகாமம் தெற்கிலுள்ள ஐம்பது பாலர் முன்பள்ளிகளில் பயில்கின்ற சுமார் 2 ஆயிரம் பிள்ளைகளுக்கான போஷாக்கு உணவுகளை மாதாந்தம் வழங்கி வருவதாகத் தெரியவருகின்றது.

வலிகாமம் பிரதேசத்திலுள்ள சுன்னாகம், தெல்லிப்பளை, சங்கானை, கோண்டாவில், மானிப்பாய் மற்றும் பண்டத்தரிப்பு ஆகிய ஆறு இடங்களில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களினால் நடாத்தப்பட்டு வருகின்ற பாலர் முன்பள்ளிகளுக்கே இப்போஷாக்கு உணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். (க-77)

# வலி. தென். மேற்கு பிரிவில் 56 பேருக்கு வீடமைப்புக் கடன்

வலி தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வீடு சேதத்திற்குள்ளாகி நட்ட ஈடு கோரி விண்ணப்பித்த, 1500 ரூபாவிற்கு மேல் வருமானம் பெறும் ''உ'' அட்டையுடைய விண்ணப்பதாரிகள் 56 பேர் முதல் கட்டமாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களது பெயர் அடங்கிய பட்டியல் யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியிலிருந்து பிரதேச செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஏனையவர்களது விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்படுவதாகவும் விரைவில் அவர்களுக்கான கொடுப்பனவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## கோப்பாய் வடக்கில் மட்டும்

# மிதிவெடி மற்றும் கண்ணிவெடிச் சம்பவத்தில் இருவர் பலி! 15 இற்கும் மேல் காயம்

(அச்சுவேலி)

கோப்பாய் வடக்கு கிராம சேவகர் பிரிவில் மிதிவெடி மற்றும் கண்ணிவெடித் தாக்குதல் சம்பவங்களில் இதுவரையில் இரண்டுபேர் பலியாகியுள்ளதுடன் 15 பேருக்கு மேல் படுகாயமடைந்துள்ளதாக அப்பகுதி கிராம சேவகர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

மிதிவெடி மற்றும் பொறிவெடிகளின் தாக்கம் கோப்பாய் வடக்கின் பிரதான வீதிக்கு கிழக்குப்புறமாகவே அதிகமாக இருந்துள்ளது.

இப்பகுதியில் மேய்ச்சலுக்காக சென்றுள்ள 25 க்கும் மேற்பட்ட மாடுகள் பலியாகியுள்ளன. பல மாடுகள் காயங்களுக்கு உள்ளாகியும் கால்களை இழந்த நிலையிலும் உள்ளன.

இங்குள்ள அனேகமான விவசாய நிலங்களில் பொறிவெடிகள் மற்றும் மிதிவெடிகள் அகற்றப்படாது இருப்பதனால் 250 ற்கும் மேற்பட்ட விவசாயக் குடும்பங்களின் விவசாய நடவடிக்கைகள் முடங்கிப் போயுள்ள நிலையில் உள்ளது. இதனால் இவ் விவசாயக் குடும்பத்து மக்கள் தமது சொந்த நிலங்களில் விவசாயம் செய்யமுடியாது பிறர் நிலங்களில் கூலிக்காக வேலை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் கிழக்குப்புற கரையோரப் பகுதியை அண்டிய வயல் நிலப் பிரதேசங்களில் மண் அரண்கள், முட்கம்பி வேலிகள் இடப்பட்டு இப் பிரதேசத்தில் மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருப்பதால் பல நூறு ஏக்கர் நெல்வயல்கள் தரிசு நிலங்களாக மாறிவருகின்றன. ( -14)

# வன்னிக்கான காலாண்டு மருந்து நாளை வெள்ளி அனுப்பப்படும்

## சுகாதாரப் பிரதிப்பணிப்பாளர் தகவல்

வன்னிப் பகுதிக்குத்தேவையான மருந்துப் பொருட்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை அங்கு அனுப்பி வைக்கப்படும் என வவுனியா மாகாண சுகாதாரப் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கே. இளங்கோ தெரிவித்துள்ளார்.

இம் மருந்துப் பொருட்கள் பாதுகாப்பு அமைச்சரின் அனுமதியுடனும் சர்வதேச செஞ்சிலுவைச்சங்க பாதுகாப்புடனும் அனுப்பப்படவுள்ளதாகவும் இம்மருந்துப் பொருட்கள் சுகாதார மருந்துக் களஞ்சியத்திலிருந்து தாமதமாகக்கிடைத்தமையாலேயே வன்னிக்கு அனுப்புவதில் தாமதம் ஏற்பட்டதாகவும் அவர்மேலும் தெரிவித்தார், [ந – 103]

## வீடமைப்புக் கடன்

(அரியாலை)

யாழ். மாவட்டத்தில், சகல பிரதேச செயலர் பிரிவுகளிலும் 2500/ ரூபாவுக்கு மேல் மாதாந்த வருமானம் பெறுவோருக்கு, வீடமைக்க அல்லது. வீடுகளைத் திருத்தம் செய்ய, தேசிய வீடமைப்பு அதிகாரசபை 50000/- வரை கடன் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இக்கடனைப் பெற விரும்புவோர். தங்கள் பிரதேச செயலர் பிரிவில் கடமையாற்றும் வீடமைப்பு உத்தியோகத்தரிடம் விண்ணப்பங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம். (க-84)

## புதிய சமாதான நீதவான்கள்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினதும் பொதுஜன ஐக்கிய முன்னணியினதும் கட்சி அங்கத்தவர்கள் 9 பேர் நீதி அரசியலமைப்பு அலுவல்கள் அமைச்சால் யாழ்.மாவட்ட சமாதான நீதவான்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு நியமனம் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு: வெலிச்சோர் கொன்ஸ்டன்டயின், ஜோண்சன் ஆனந்தராஜா லோறன்ஸ், கந்தையா சோமசுந்தரம், மரியநாயகம் ஞானசீலன், செல்லத்துரை செந்தில்வாணி, மலர் சின்னையா, வி.நாகநாதி, அரசரத்தினம் வைகுந்தவாசகம், குணரத்தினம் ரகு. (க)

## கூரைத்தகடுகள் வழங்கல்

(கல்வியங்காடு)

நல்லூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதியில் 1500 ரூபாவிற்கு உட்பட்ட வருமானத்தைப் பெறும் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழ்பவர்களிற்கு யு.என்.எச்.சி.ஆர். இனால் கூரைத்தகடுகள் வழங்கப்படவுள்ளது. இது சம்பந்தமான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் கிராம சேவகர் பிரிவுகள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (க-54)

## இரவில் கள் இறக்கல்

(கோப்பாய்)

கோப்பாய் பகுதியில் கடந்த சில நாட்களாக இரவு வேளைகளில் பனைமரங்களில் இருந்து கள் களவாக இறக்கப்படுவதாகப் புகார் தெரிவிக்கப் படுகின்றது.

இவ்வாறு செய்வதனால் பனைமரங்களின் பாளைகள் முறிவடைந்து விடுவதாகவும் இதனால் தமது வருமானம் பாதிக்கப்படுவதாகவும் பொது மக்கள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகின்றது. (க-79)

# பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழக இசை-நாட்டுக் கூத்துப் போட்டி முடிவுகள்

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழக இசை-நாடக-நாட்டுக்கூத்து கிராமியக் கலைகள் போட்டி முடிவுகள் அண்மையில் வெளிடப்பட்டன.

அவை பின்வருமாறு;

### ஆட்ட நாட்டுக்கூத்து

1ம் பரிசு

'காட்டகத்தே காமுகனும் கதை விடாத வீமனும்' வட்டுக்கோட்டை நாட்டுக் கூத்து அபிவிருத்திக்குழு

2ம் பரிசு

'இலங்கேஸ்வரன்'

புனித அந்தோனியார் கலாமன்றம், பருத்தித்துறை.

### நாட்டுக்கூத்து

1ம் பரிசு

'அதியரசன்'

தம்பாட்டி காந்திநாடக மன்றம்.

2ம் பரிசு

'பிரகலாதன்'

சென்றோக்ஸ் யா.வான் மதி கலாலயம், குருநகர்.

3ம் பரிசு

'மனஉறுதி'

மதனிகா நாடகமன்றம், பாசையூர்.

### இசை நாடகம்

1ம் பரிசு

'பூதத்தம்பி'

ம. தைரியநாதன் குழுவினர், யாழ்ப்பாணம்.

2ம் பரிசு

'கோவலன் கண்ணகி'

இளந்தொண்டர் சபை, இணுவில்.

3ம் பரிசு

பூதத்தம்பி

நடிகை கலாமன்றம் மயிலங்காடு.

### ஆறுதல் பரிசுகள்

அரிச்சந்திர மயான காண்டம்'

எஸ். வி. கே. நல்லையா குழுவினர், கரவெட்டி.

'நல்லதங்காள்'

சரஸ்வதி சனசமூகநிலையம் உரும்பிராய்.

'அரிச்சந்திர மயான காண்டம்'

ஏ. வி. வேலாயுதம் குழுவினர், கரவெட்டி.

### காத்தவராயன் கூத்து

1ம் பரிசு

சமரபாகு நியூட்டன் நாடக கலாமன்றம், வல்வெட்டித்துறை.

2ம் பரிசு

ஆ. இராமநாதன் குழுவினர், குடத்தனை.

3ம் பரிசு

முத்தமிழ் மன்றம், நாயன்மார்கட்டு.

### ஆறுதல் பரிசுகள்

கே. எஸ். சந்திரன் குழுவினர், கரவெட்டி.

மாதனை காவி மகளிர் கலாலயம்.

காந்தி நாடகமன்றம், தம்பாட்டி.

வஜீவன நாடகமன்றம், உடுப்பிட்டி.

### பாடசாலை மட்டம்

### இசை நாடகம்

1ம் பரிசு

'சகுந்தலை'

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்.

2ம் பரிசு

'வள்ளி திருமணம்'

நல்லூர் இந்து பெண்கள் பாடசாலை.

3ம் பரிசு

'சத்தியவான்சாவித்திரி'

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

### காத்தவராயன் கூத்து

1ம் பரிசு

யா/அம்பன் அ. மி. த. க. பாடசாலை, குடத்தனை.

2ம் பரிசு

யா/கட்டைவேலியார்க்கரு வித்தியாலயம் யா/செங்குந்தா இந்துக் கல்லூரி.

3ம் பரிசு

யா/கொற்றாவத்தை அ. மி: த. க. பாடசாலை.

### கிராமியக் கலைகள் போட்டி- 1999 முடிவுகள்

### 20 வயதுக்குக் கீழ்

### கும்மி

1 ஆம் பரிசு- சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

### கோலாட்டம்

1 ஆம் பரிசு- வே. ஜெயம் நியூட்டன் நாடக கலாமன்றம், வல்வெட்டித்துறை.

### கிராமிய நடனம்

1 ஆம் பரிசு- யாழ். மெதடிஸ்தகல்லூரிபருத்தித்துறை.

2 ஆம் பரிசு- திருமதி த. தங்கமலர், மிருசுவில்.

### தாலாட்டு-ஒப்பாரி

1 ஆம் பரிசு-வே.பிரதீபன், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

2 ஆம் பரிசு- அளவெட்டி அருணோதயா கல்லூரி.

### விவசாயத் தொழிற்பாடல்

1 ஆம் பரிசு- கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்.

2 ஆம் பரிசு- வே. ராஜீவ், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

### நாட்டார் பாடல் பொது

1 ஆம் பரிசு- நல்லூர் இந்து தமிழ் மகளிர் பாடசாலை.

2 ஆம் பரிசு- அண்ணா கலாமன்றம் பண்ணாகம், சுழிபுரம்.

3 ஆம் பரிசு- அளவெட்டி அருணோதயாக்கல்லூரி.

### கரகம்

20 வயதுக்குக் கீழ்

1 ஆம் பரிசு- அம்பன்அ.மி. த. க. பாடசாலை, குடத்தனை.

2 ஆம் பரிசு- திரு. நா. ஆனந்தராணி குழுவினர், நெல்லியடி.

3 ஆம் பரிசு- சோபிகா கதிர்காமநாதன்கொக்குவில்.

### காவடி

1 ஆம் பரிசு- அளவெட்டி அருணோதயா கல்லூரி.

2 ஆம் பரிசு- யாழ். நல்லூர் இ. த. ம. பாடசாலை, நல்லூர்.

3 ஆம் பரிசு- அண்ணா கலைமன்றம், பண்ணாகம்.

### மீனவர் பாடல்

1 ஆம் பரிசு-புனிதசம்பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்

2 ஆம் பரிசு- திருமதி ஆனந்தராணி குழுவினர், நெல்லியடி.

3 ஆம் பரிசு- திரு. செல்வமணிவடமயிலைகலாமன்றம், போயிட்டி, இளவாலை.

### 20 வயதுக்கு மேல்

### கரகம்

1 ஆம் பரிசு- நாகதீபம் கலாமன்றம், நாகர்கோவில்.

2 ஆம் பரிசு- நிருத்திய கலாமன்றம், அரியாலை.

### ஒயிலாட்டம்

1 ஆம் பரிசு- குருசாமி சுகுமார் குழுவினர், நந்தாவில் ஒழுங்கை, கொக்குவில்,

### குதிரையாட்டம்

1 ஆம் பரிசு- கடம்பேஸ்வரன், வட்டுக்கோட்டை.

### கிராமிய நடனம்

1 ஆம் பரிசு- நா. ஆனந்தராணி, நெல்லியடி.

2 ஆம் பரிசு- வே. ஜெயம், நியூட்டன் கலாமன்றம், காஞ்துறை, சமரபாகு, வல்வெட்டித்துறை.

### அரிவு வெட்டு நடனம்

1 ஆம் பரிசு- வே. செல்வமணி, போயிட்டி, வடமயிலை கலாமன்றம், இளவாலை.

### தாலாட்டு - ஒப்பாரி

1 ஆம் பரிசு- க. ஆறுமுகம், வேங்குழல் நாடகக்கலாமன்றம், பளை.

2 ஆம் பரிசு- கு. ஜெபதேவி, பிறவுண்வீதி, நீராவியடி.

3 ஆம் பரிசு- மு. தணிகாசலம், கற்கோவளம், பருத்தித்துறை.

### நாட்டார் பாடல் பொது

1 ஆம் பரிசு- மு. தணிகாசலம், கற்கோவளம், பருத்தித்துறை.

### விசேடம் வேலாட்டம்

1 ஆம் பரிசு- திரு. செல்லத்துரை கலைமகள் கலாமன்றம், கச்சாய்வேலி, செல்வபுரம்.

மேற்படி போட்டி முடிவு (5 ஆம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம்

எட்பக வன்ன சிறுமைத்தே
ஆயினும் உட்பகை உள்ள
தாம் கேடு.
- குறள்

# வலம்புரி

## மனிதாபிமானம்

சமாதானம் ஜனிக்கப் போகின்ற வேளையில் மனிதாபிமானம் முளைவிடுவது வரவேற்கத்தக்கதே. இது தான் முதற்தடவையல்ல. இதற்கு முன்னும் பல தடவைகள் அதன் சாயலை அறிந்திருக்கின்றோம் இந்த மனிதாபிமானம் ஒருவழியில் நின்று விடாது இருவழியும் நிலைபெறவேண்டும் என்பது அவசியமாகும்.

பரஸ்பர நல்லெண்ணப் பரிமாற்றம் நாட்டின் அமைதிச் சூழலை உருவாக்கும் என்பது உலகியல் உண்மை. கட்சிபேதங் கடந்து குறுகிய இலாபங்களை மறுக விட்டு மனச்சாட்சிக்கு புத்துயிரழித்தால் புலர்வது சமாதானம். இன்றைய வேளையின் தேவையும் அதுவே.

உலக வங்கி நிபுணர்கள் யுத்தத்தை நீட்டாது நாட்டின் அழிவைப் போக்க வகை செய்ய வேண்டும் என்றனர். அன்றியும் உலக நாடுகளின் அரசியல் யதார்த்தங்களும் நமக்குப்பாடம் புகட்டாமல் இல்லை. குழந்தைப் பிள்ளைக்கு விளையாட்டு சுண்டெலிக்குச் சீவன் போகுவது என்ற நிலையிலில்லாது சிறுபிள்ளைத்தன அரசியலை வேரோடு சாய்க்க வேண்டும்.

கையேந்தும் நாடாக நீண்ட நெடுங்காலத்திற்கு நாட்டை நகர்த்தக் கூடாது. வளம்கொழிக்க வகை செய்து தலை நிமிர்ந்து நிற்க வேண்டிய கடமை ஆளும் தரப்பினருக்கு வேண்டும். கடன் பட்டார் நெஞ்சம் போல கலங்கினான் இலங்கை வேந்தன் என்பது கம்பன் அறிவமுதம் ஆதலால் பெறப்படும் செல்வம் அனைத்தும் ஆக்கத்திற்கு பயன்படட்டும். அழிவின் பக்கம் தலைவைத்துக் கூடபடுத்தலாகாது.

குட்டி இலங்கையில் முட்டி மோதிக்கொள்ளும் இருசாராரும் மனிதாபிமானத்தைப் பேண வேண்டும். நம்பிக்கையை வளர்க்கவேண்டும். கணவன் மனைவிசண்டைக்கு வழிப்போக்கன் சமரசம் பேசும் நிலைக்கு சீரழிந்தது போதும். இன்று அது பற்றிய சர்ச்சைக்கு இடமில்லை சமரச சன்மார்க்கத்தை பெறும் முயற்சியில் காலூன்ற வேண்டும். அந்த எண்ணம் ஆழப் பதிய அசையாது அடையும் வரை உழைக்க வேண்டும். நாடு உதிரத்தால் நனைந்தது போதும் கொடுத்த விலைகளும் ஏராளம். இனிவேண்டுவது சமாதானம்.

- அன்புடன் ஆசிரியர்

மக்கள் போக்குவரத்திற்கு

# இடைஞ்சல் ஏற்படும் விதமாக கம்பங்களை நாட்டக்கூடாது

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேசசபை எல்லைக்குள் மின்சார, தொலைத்தொடர்பு, புனரமைப்புப் பணிகளில் புதிதாக நாட்டப்படும் மின்கம் பங்கள், தந்திக்கம்பங்கள், மக்கள் போக்குவரத்திற்கு இடைஞ்சல்களை விளைவிப்பதாக தனது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேசசபை தலைவர் தெரிவித்துள்ளார்.

அவர் இதுதொடர்பாக மேலும் தெரிவிக்கையில் நன்கு திட்டமிடப்படாத வகையிலும் தெரு, ஒழுங்கைகள் அகலத்தை குறைப்பதாகவும், தெருவோர வெள்ள நீர் வடிந்தோடுவதைத் தடை செய்வதாகவும் தெருக்கள் சந்திக்கும் சந்திப்பகுதியில் வாகனங்கள் திரும்புவதற்கு இடைஞ்சலாகவும் தெருவோரத்தில் கம்பங்கள் நாட்டப்படுவதால் இக்கம்பங்கள் நாட்டப்படும் இடத்திலுள்ள காணி எல்லைகள் காலப் போக்கில் தெருவோரத்திற்கு முன்தள்ளப்படும் சூழ்நிலை உருவாகும் வாய்ப்புண்டு.

எனவே எதிர்காலத்தில் வீதிகள், ஒழுங்கைகள் விஸ்தரிப்புக்கு இவற்றை மீளத் தள்ளி நாட்டும் சந்தர்ப்பம் ஏற்படும் போது பிரதேச சபை பல சிரமங்களையும், பணச் செலவுகளையும் எதிர்நோக்க வேண்டியுள்ளதுடன் புனரமைப்புப் பணிகளின் கீழ் தெருக்களிற்குத் தாரிட்டு வீதியமைக்கும்போது தெருவின் அகலத்தைக் கூட்ட முடியாத சந்தர்ப்பங்கள் உண்டாகின்றது. ஆகவே வருங்காலத்தில் கம்பங்கள் நாட்டப்படும்போது போக்குவரத்திற்கு இடைஞ்சல் விளைவிக்காத வகையில் கம்பங்களை நாட்டுவதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தவறும் பட்சத்தில் புதியகம்பங்கள் நாட்டப்படும்போது எனது முன்னனுமதி பெறப்படும் சந்தர்ப்பம் உருவாகலாம் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம். இவ்வாறு அவரது செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க)

சண்டிலிப்பாய்பிரதேசசெயலர்பிரிவில்

## கணவனை இழந்த பெண்கள் விபரம் இன்று முதல் திரட்டல்

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் கணவனை இழந்த பெண்களின் விபரம் இன்று 2ம் திகதி வியாழன் முதல் அப் பிரதேச செயலகத்தினால் திரட்டப்படவுள்ளது.

இதன் பிரகாரம் சம்பந்தப்பட்டவர்கள் பின்வரும் கிராம சேவையாளர் அலுவலகங்களில் குறித்த திகதிகளில் தமது பெயர் விபரங்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்:

இன்று 2ம் திகதி ஜே 129, 130-சுதுமலை தெற்கு கி.சே. பணிமனை.

6ம் திகதி ஜே 131, 132, 133- உயரப்புலம் கிராம அலுவலர் பணிமனை.

8ம் திகதி ஜே 134, 135, 136-நவாலி வை. எம்.சி.ஏ. மண்டபம்.

10ம் திகதி ஜே 137,138, 139, 140 - மானிப்பாய் தெற்கு கி. சே. பணிமனை.

13ம் திகதி ஜே 141,142, 143, 144 - சண்டிலிப்பாய் வடக்கு கி. சே. பணிமனை.

15ம் திகதி ஜே 145,146, 147 - பிரான்பற்று கி. சே. பணிமனை.

16ம் திகதி ஜே 148,149- சில்லாலை வடக்கு கி. சே, பணிமனை.

20ம் திகதி ஜே 150,151, 152-மாதகல் தெற்கு கி. சே. பணிமனை.

22ம் திகதி ஜே 153,154, 155,156-இளவாலை கி.சே. பணிமனை.

(க)

ஆத்தியடி மருத்துவ நிலைய

## கடமை நாட்கள் மூன்றாக குறைப்பு நோயாளர்கள் விசனம் தெரிவிப்பு

(பருத்தித்துறை)

ஆத்தியடி அரசாங்க மருத்துவமனையின் கடமை நாட்கள் 3 நாட்களாகக் குறைக்கப்பட்டமையால் நோயாளர்கள் பெரிதும் கஷ்டங்களை எதிர்நோக்குவதாக விசனம் தெரிவிக்கப் படுகின்றது.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது; இம் மருத்துவமனையில் கடந்த 13 வருடகாலமாக கடமையாற்றிய டாக்டர் எஸ். முத்துக்குமாரசுவாமி ஓய்வு பெற்றதையடுத்து, மருத்துவமனையின் கடமை நாட்கள் மூன்று நாட்களாகக் குறைக்கப்பட்டது.

தற்பொழுது மந்திகை அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றுகின்ற டாக்டர் வீ. சிவராஜா செவ்வாய், வியாழன், சனி ஆகிய தினங்களில் இங்கு கடமையாற்றி வருகின்றார்.

டாக்டர் எஸ். முத்துக்குமாரசுவாமி ஓய்வு பெறுவதற்கு முன் இம் மருத்துவமனை ஞாயிற்றுக் கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் இயங்கி வந்தமையால் பெருமளவு நோயாளர் சிகிச்சை பெற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கதாகும். (க-11)

## கல்வியை வருந்தி கற்குமளவிற்கு அறிவு பெருகிக் கொண்டே இருக்கும்

### வடமராட்சி பிரதேச செயலர் உரை

(நெடுந்தீவு)

எல்லாச் செல்வங்களிலும் மேலான செல்வம் கல்விச் செல்வமாகும். இதனை யாரிடமிருந்தும் நாம் அபகரிக்கவோ, சூறையாடவோ, கொள்ளையிடவோ இயலாது நாமே முயன்று பெற்றுக் கொள்ளல் வேண்டும். எவ்வளவுக் கெவ்வளவு கல்வியை விருத்தி செய்கின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு அது வற்றாத சுனைபோல ஊறிக் கொண்டே இருக்கும்.

இவ்வாறு வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை செயலர் செ. ஸ்ரீநிவாசன் கரவெட்டி, கரணவாய் வேதாரணியேஸ்வரா சன சமூகநிலையம், மற்றும் முன்பளளி என்பவற்றைத்திறந்து வைத்தபோது உரையாற்றினார்.

தலைவர் ஸ்ரீலஸ்ரீ ச. சட்டநாதக் குருக்களின் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் வடமராட்சிதெற்கு, மேற்கு பிரதேச சபை செயலர் சி. பசுபதி உரையாற்றுகையில்; இந்த சனசமூக நிலைய நிர்வாகம் மேலும் பல நற்பணி புரிந்து தம்மையும் தம்மைச்சார்ந்தோரையும், நம்நாட்டையும் வளம்படுத்த அயராது உழைக்க வேண்டும் என்றார். (க-82)

## குறைவின்றி வாழ்வாரிக் குவலயமே

முடியேற்ற நன்மண்யாழ்ப் பாணந் தன்னில்
முன்வினையோம் தீவினையை முற்றாய்ப் போக்கி
விடிவேற்ற விழைந்தமுனோர் விருப்பத் தாலே
விரிமலர்வார் சடைவண்ணை வைத்தீஸ்வரனாம்
பொடியேற்ற நெற்றியுடைப் புனிதன் பாகம்
பொருந்திடுவா லாம்பிகையோ டுறையும் ஈசன்
கொடியேற்ற விழவுதனைக் குளிரக் காண்பார்
குறைவின்றி வாழ்வாரிக் குவல யமே.

நாயன்மார்க்கட்டு இராசையா குகதாசன்

(வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் கொடியேற்றம்இன்று)

## திருத்தவேலைகள் இடம்பெறவில்லை

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட அரசடி முதலாம் ஒழுங்கை பாரிய அளவில் சேதமடைந்துள்ள போதிலும் திருத்த வேலைகள் இடம்பெறாததால் அவ் வீதியால் பிரயாணம் செய்யும் மக்கள் பெரும் கஸ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவ் வீதி பிரதான வீதியுடன் இணையும் இடத்தில் உள்ள பாலம் கடந்த ஆண்டு சேதமடைந்து திருத்தவேலைகள் செய்யப்பட்ட போதிலும் இவ் வீதி சுமார் 15 வருடங்களாக திருத்தப்படாது சேதமடைந்து உள்ளதாக அப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (க-14)

## நிவாரணம் வழங்கப்படவில்லை

(புலோலி)

வடமராட்சி கிழக்கில் இடம்பெற்ற வன்செயல்களையடுத்து மருதங்கேணி, உடுத்துறை, வத்திராயன் கிராமங்களிலிருந்து இடம் பெயர்ந்து பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் தஞ்சமடைந்துள்ள சுமார் 25 குடும்பங்களுக்கும் எந்தவிதமான நிவாரணங்களோ உதவிகளோ வழங்கப்படவில்லை என இடம் பெயர்ந்து தஞ்சமடைந்தோர் கவலையுடன் தெரிவித்துள்ளனர்.

வன்செயல்களினால் அக்கிராமங்களிலிருந்து இடம் பெயர்ந்த 25 குடும்பங்கள் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் உள்ள உறவினர்களின் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர் [க-52]

## வீதி திருத்தம் இல்லை

(நெல்லியடி)

வதிரி உடுப்பிட்டி வீதி நீண்ட காலமாக திருத்தம் செய்யப்படாமல்காணப்பட்டு வருகின்றது.

மேற்படி வீதியில் மிக நீண்ட நாட்களாக கல்பறிக்கப்பட்டிருந்த போதும் திருத்த வேலைகள் இன்னும் மேற்கொள்ளப் படவில்லை.

இதனால் பாடசாலை மாணவர்கள் உட்பட அவ் வீதியால் பயணம் செய்வோர் அனைவருமே பெரும்சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்தவீதியில் மாவட்ட நீதிமன்றம், வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, பிரதேச செயலகம் போன்றன அமைந்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. (க-18)

### பாரம்பரிய...

களுக்கான பரிசுகள், பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தில் வருடாந்தப் பரிசளிப்பு விழாவின் போது வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## கேபிள்கள் அமைத்தல்

(மானிப்பாய்)

நவாலி ஆனைக்கோட்டைப் பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கு கேபிள்கள் அமைக்கும் வேலைகள் கடந்த சிலதினங்களாக மின்சாரசபை ஊழியர்களால் மிகத் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (க)

## (சாயி அருளமுதம்)

### ஹரியின் பாதங்கள்



எத்தனை நேரத்தை, புத்திர, பந்து, வியாபாரம் முதலியவற்றுக்காக பேசிப் பேசி செலவழிக்கிறீர்களோ எத்தனை நேரத்தை தனம், தான்யம், புகழ், உறவு என்பவற்றுக்காக செலவழிக்கிறீர்களோ அதில் ஒருகணமாவது, ஹரியின் பாதங்களை எண்ணி அவற்றின்மேல் சிந்தனையைச் செலுத்துகிறீர்களா என்றால் அதுதான் இல்லை. ஒரு நாளின் 24 மணி நேரத்தில் 23 மணி 55 நிமிடம் உங்கள் சுயநலத்துக்காகச் செலவழித்தாலும் ஒரு நிமிடம் இறைவனைப் பற்றி சிந்திக்க முடியவில்லை என்றால் அதன் பெயர் வாழ்க்கையா? உங்களை எப்படி மனிதர்கள் என அழைத்துக் கொள்ள முடியும்? எவ்வாறு ஆனந்தத்தை உங்களால் சம்பாதித்துக்கொள்ள முடியும்? சாந்தி, சாந்தி என்றால் ''சாந்தி'' எங்கிருந்து வரும்? கடவுளைப் பற்றிய சிந்தனையால் தான் அமைதி என்பதே ஏற்கும்!

- பாபா

திருக்கேதீஸ்வர ஆலய சுற்றாடலில் உள்ள

# இராணுவத்தை வெளியேற கோரி

# தில்லைக் கூத்தன் உண்ணாவிரதம்

(கொழும்பு)

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் செயற்குழு உறுப்பினர் இ.நடராசா (தில்லைக்கூத்தன்) கொழும்பு இந்து மாமன்ற முன்றலில் இரண்டு கோரிக்கைகளை முன்வைத்து நீராகாரம் அருந்தாமல் சாகும்வரை உண்ணாவிரதத்தை நாளை மறுதினம் ஆரம்பிக்கப்போவதாக அறிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் ஆலோசகரான இவர் திருக்கேதீஸ்வர ஆலயத்திலிருந்து இராணுவம் வெளியேறி 2 கிலோமீற்றருக்கப்பால் செல்ல வேண்டும் என்றும் இந்த விடயத்தை சர்வதேச மட்டத்திற்கு கொண்டுவரும்நோக்கிலுமே இவ்வுண்ணாவிரதத்தைமேற்கொள்வதாகவும் தெரிவித்துள்ளார்.

இராணுவம் முன்னர் ஆலயத்திலிருந்து 2 கிலோ மீற்றர் தூரத்திலேயே தரித்திருந்ததாகவும் எனவே ஆலயத்திலிருந்து வாபஸாகி பழைய இடத்திற்கு செல்ல வேண்டும் என்றும் நடாரசா கேட்டுள்ளார். (வ-4)

## இன்று கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று காலை 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

கொடியேற்றத்தைத் தொடர்ந்து 22 தினங்கள் உற்சவம் நடைபெறவுள்ளது. 19ம் திகதி தேர்த் திருவிழாவும் 20ம் திகதி தீர்த்தத் திருவிழாவும் 21ம் திகதி பூங்காவன உற்சவமும் நடைபெறவுள்ளது. (வ)

## ஜனாதிபதி மிலேனியம் புலமைப்பரிசில் வருடாந்தம் 6256மாணவர்க்குகிடைக்கும்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் அதிக திறமை காட்டும் 6256 மாணவர்களுக்கு வருடந்தோறும் புலமைப்பரிசில் வழங்கும் திட்டமொன்று மேற்கொள்ளப்பட உள்ளது.

ஜனாதிபதி நம்பிக்கை நிதியத்தினால் வழங்கப்பட உள்ள இப்புலமைப் பரிசில்களுக்கு ''ஜனாதிபதி மில்லேனியம் புலமைப் பரிசில் திட்டம்'' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இப்புலமைப்பரிசில் திட்டத்தில் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையின் போது திறமைகாட்டும் கிராமப்புற மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (7)

### புறக்கோட்டை---

தம்மைப் பதிவுசெய்யாமலும் பதிவுகளைப் புதுப்பிக்காமலிருந்தவர்களையே பொலிசார் கைது செய்து விசாரணைக்குட்படுத்தி பின் அவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [வ]

### புலிகள்---

அம்பாறை
★ ரமேஸ்காந் [யோகராசா கிருஸ்ணமூர்த்தி] மட்டக்களப்பு
வீரவேங்கைகளான
★ வளர்மதி [மினியர் குருகுலச் செல்வி] கிளிநொச்சி
★ சுஜிதன் [தேவராசா லவக்குமார்] அம்பாறை


ஸ்ரீ செல்வா
யாழ். ஸ்ரான்லி வீதி,
காலை 10-30 பி.ப 2.30
மம்முட்டி, நக்மா,
நாசர் நடித்த
'எதிரி'
(புதிய வெளியீடு)
CD பிரதி
(00115)


### வீசிய....

இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதலை நடத்தியவர்கள் சைக்கிளில் ஏறித்தப்பிச் சென்று விட்டதாகவும் குறிப்பிட்ட குண்டு நேற்று பகல் 12.35 மணியளவில் இராணுவ இரசாயன பகுப்பாய்வு நிபுணர்களால் செயலிழக்கச் செய்யப்பட்டது (க-52,11)

### மலசலகூட---

மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி மயிலேறும் பெருமாள், வல்வெட்டித்துறை கிராம சேவகர் எஸ். பரமேஸ்வரன், பருத்தித்துறை மாவட்ட நீதிவான் எஸ்.ஏ.ஈ. ஏகநாதன் ஆகியோர் முன்நிலையில் எலும்புக்கூடு மீட்கப்பட்டது.

மீட்கப்பட்ட எலும்புக்கூடு மனிதனுடையதா? அல்லது மிருகங்களினுடையதா? என்பது பற்றி ஆய்வு செய்ய வேண்டுமென வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். (வ-16,52)

### மன்னாரில்---

நிலையில் மன்னார் ஆதார வைத்தியசாலையிலும் பின்னர் அவசர சத்திர சிகிச்சைக்காக அனுராதபுரம் வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளார்

புலிகளின் பிஸ்ரல் குழுவினரே இந்தத் தாக்குதலை மேற்கொண்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (வ-103)

## வெக்டர் வேலாயுதம் காலமானார்

பிரபல கணித ஆசிரியர் வெக்டர் வேலாயுதம் நேற்று அதிகாலை காலமானார்.

நேற்று முன் தினம் உடுப்பிட்டியில் உள்ள தனது வீட்டில் பாரமான பொருளொன்றைத் தூக்கும் போது திடீரெனக் கீழே விழுந்த அவர் தலையில் காயமுற்ற நிலையில் ஊறணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின் நேற்று அதிகாலை அங்கு காலமானார்.

தூய/பிரயோக கணிதத்தில் தனக்கென ஓர் தனியிடத்தை வகித்த வெக்டர் வேலாயுதம் தமிழ் மண்ணில் பல பொறியியலாளர்களையும், கணிதப் பட்டதாரிகளையும் உருவாக்குவதற்குக் காரணமாக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### ஷெல் வீழ்ந்து---

செல்லத்துரை சபாரத்தினம் (வயது 48) சாவகச்சேரி, சின்னத்தம்பி (வயது 70) மீசாலை, கோணேஸ்வரன் நாகம்மா (வயது 32) கொடிகாமம், கிறீஸ்துராசா மேரி வசந்தி (வயது 33) மீசாலை, தர்மலிங்கம் சிவக்கொழுந்து (வயது 38) சாவகச்சேரி, கணபதிப்பிள்ளை இராசம்மா [வயது 50]) சாவகச்சேரி, சபாரத்தினம் காமாட்சி (வயது 38) சாவகச்சேரி, பாலசிங்கம் விஜயலாகரன் (வயது 16), சிவபாலசிங்கம் (வயது 36) சாவகச்சேரி.

**சூட்டுச் சத்தம்கேட்டதும் ராணுவம்படுக்கச் சொன்னது**

இச்சம்பவத்தில் காயப்பட்டு யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் இச்சம்பவம் பற்றித்தெரிவிக்கையில் கூறியதாவது:

சம்பவதினம் நானும் எனது மனைவியும் மகனும் வயலுக்கிச் சென்றிருந்தோம். அப்போது காலை 9-00 மணியிருக்கும் துப்பாக்கிச் சூட்டுச்சத்தம் கேட்டது.

அருகில் இருந்த இராணுவ முகாமில் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவம் வீழ்ந்து படுக்குமாறு உத்தரவிட்டது. உடனே நாம் படுத்துவிட்டோம். நீண்ட நேரம் படுத்து விட்டு எழும்பி வேலை செய்து கொண்டிருந்த போதே இந்த ஷெல் வீழ்ந்து வெடித்தது. இதனால் தான் நாம் அனைவரும் சிறு காயங்களுக்குள்ளாகி தெய்வாதீனமாக உயிர் தப்பினோம் எனக்கூறினார். (வ-21)


# உடன் தேவை

★ அச்சுக்கோர்ப்பில் அனுபவமுள்ள ஆண்கள் மட்டும்

★ அச்சுக்கோர்ப்புப் பயிலுநர்கள் ஆண்கள் மட்டும் உடன் தேவை.

நேரில் தொடர்பு கொள்ளவும்
'வலம்புரி'
இல. 15, வெள்ளாந்தெரு,
(வைத்தீஸ்வராக் கல்லூரிக்கு அருகாமை)
யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆண்டு மார்ச் மாதம் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## முதலாவது கிரிக்கெட்டெஸ்ட் போட்டியில் இலங்கை 2விக்கற்றுக்களால் வெற்றி

[இஸ்லாமபாத்]

இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கிடையே ராவல்பிண்டி நகரில் நடைபெற்ற முதலாவது கிரிக்கட் டெஸ்ட் போட்டியில் இலங்கை இரண்டு விக்கற்றுக்களால் பாகிஸ்தானை வெற்றி கண்டுள்ளது.

வெற்றி பெறுவதற்கு 209 ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையில் நேற்றும் களமிறங்கிய இலங்கையணி ஆட்டம் நிறைவு பெற 9.1 ஓவர்களிருக்கையில் இந்த இலக்கையெட்டியது.

நேற்றைய ஆட்டத்தின் வெற்றிக்கு களுவித்தாரண - ரணதுங்க ஆகியோரின் இணைத்துடுப்பாட்டமும் விறுவிறுப்பும் வேகமும் முக்கிய பங்கு வகிக்கின்றது.

இந்த ஆட்டத்தில் இவர்கள் இருவரும் ஆட்டமிழக்காது முறையே 36, 29, ஓட்டங்களைப் பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது (7)

## கொட்டடியில் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

கொட்டடி சிவன்பண்ணை வீதியைச் சேர்ந்த நவரெட்ணம் சுரேஸ்கரன் என்பவர் நேற்று பி.பகல் 2 மணியளவில் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரது கைது குறித்து உறவினர்களால் புளொட் அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-4)

## முன் பள்ளி ஆசிரியர் பயிற்சி

(மந்திகை)

வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு உட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சிகளை சிறந்த பல்கலைக்கழகங்களில் நடாத்துவதற்கான முயற்சியினை வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா மேற்கொண்டுள்ளார் எனத் தெரியவருகின்றது. (க-23)

### இருபாலை...

வில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் இறந்தவரின் சடலத்தை இனங்காணும் பொருட்டு கோப்பாய் பொலிஸார் நேற்றே யாழ். போதனாவைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

### குறைந்த...

பல் உரிமையாளர்பாதுகாப்பு அமைச்சின் செயலர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் இரண்டு பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (வ)

### உறவினர்...

உரிமை கோராவிடில் அவரது சடலத்தை 3நாட்களின் பின்னரே அரச செலவில் அடக்கம்செய்ய வேண்டும். அவர் இறக்கமுன் தனது சடலத்தை பல்கலைக்கழகத்திற்கு வழங்கும்படி உயிலில் எழுதியிருந்தால் மட்டுமே அதனை பல்கலைக்கழகத்திற்கு வழங்க முடியும். அல்லது நீதிமன்ற அனுமதியுடனேயே பல்கலைக்கழகத்திற்கு வழங்க வேண்டும்.

ஆனால் இறந்தவரின் சடலத்தை 3நாட்கள் வைத்தியசாலையில் வைத்திருக்காமலும் நீதிமன்ற அனுமதியின்றியும் யாழ். போதனாவைத்தியசாலை சடலத்தை மருத்துவ பீடத்திற்கு வழங்கியுள்ளது.

இதே வேளை வைத்தியசாலை நிர்வாகம் சடலத்தை மருத்துவபீடத்திடம் வழங்கும்போது உறவினர் எவராவது கேட்கும்பட்சத்தில் திருப்பி அதனை ஒப்படைக்க வேண்டும் எனும் நிபந்தனையுடனேயே வழங்கியது.

ஆனால் உறவினர் சடலத்தைக் கேட்டபோது மருத்துவ பீடாதிபதி அவ்வாறுசெய்யாமல் நீதிமன்ற அனுமதியைப் பெற்றுவரும்படி தெரிவித்துள்ளார். இது நியாயம் அற்றது என்று உறவினர் சார்பாக ஆஜரான சட்டத்தரணி கே. அரியநாயகம் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவந்தார். இதனை அடுத்து இச்சடலத்தை உறவினரிடம் ஒப்படைக்குமாறு யாழ்.மருத்துவ பீடத்திற்கு உத்தரவிட்ட யாழ். மேலதிக நீதிவான் இ.த.விக்கினராசா இதுபற்றிய அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிற்குமாறும் உத்தரவிட்டார் இவ்வுத்தரவு நீதிமன்றம் பிஸ்கால் மூலம் மருத்துவ பீடத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (ந-4)

### ரணில்...

தே.கட்சியின்செயலர்காமினி அத்துக்கோறள கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் உட்பட ஆயிரக் கணக்கானோர் கலந்து கொண்டார்கள்.

இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் 'சர்வாதிகார ஆட்சியை ஒழிப்போம்' ''ஜனாதிபதி பதவியையும் பிரதமர் பதவியையும் ஒருவருக்கு வழங்குவதா''

உண்ண உணவில்லை உடுக்க உடையில்லை நாட்டில் சமாதானமும் இல்லை என்பன போன்ற கோசங்கள் எழுப்பப்பட்டன.

இதுவேளை இளைஞர் விவகார வேலைவாய்ப்பு அமைச்சர் எஸ். பி. திஸ்ஸநாயக்கா பாராளுமன்றத்தில் அண்மையில் உரையாற்றிய போது அடுத்துவரும் ஆறு ஆண்டுகள் வரை பிரதமரின் அதிகாரங்களையும் ஜனாதிபதியே கொண்டிருப்பார் எனக் கூறியிருந்தது தெரிந்ததே.

இவ்வுரைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அண்மைக் காலங்களாக அரசினால் ஐ. தே. கட்சிக்கு விடுக்கப்பட்டு வரும் அச்சுறுத்தல்களைக் கண்டித்துமே இவ் ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டது.

இவ் ஆர்ப்பாட்டப் பேரணியினால் காலிவீதிப் போக்குவரத்து தடைப்பட்டது குறிப்பிடத்தக்கது. (வ)

### வெளிவாரி---

வர் ஒன்றியம் கோரியுள்ளது.

இது குறித்து துணைவேந்தருக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

க.பொ.த. (உயர்தரப்) பரீட்சை எடுத்தபின் பல்கலைக்கழகம் மற்றும் உயர் கல்வி வாய்ப்பினை இழந்த மாணவர்களின் எண்ணிக்கை வன்னியில் அதிகரித்து வருகிறது.

வெளிவாரிப் பட்டப் படிப்புக்காக வன்னி மாவட்ட மாணவர்கள் வெளியிடங்களுக்கு சென்று பதிவினை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் அதுகூட அங்கு எட்டாத ஒன்றாகவே உள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு பின்தங்கிய நிலையிலுள்ள வன்னியில் கல்விச் சூழலை விருத்தியடையச் செய்வதற்காக வெளிவாரிப் பட்டப்படிப்புகள் அலகின் தொடர்பு அலுவலகம் ஒன்றினை முல்லைத்தீவில் நிறுவி அங்கு பதிவுகள் மற்றும் பரீட்சைகள் நடைபெற ஆவன செய்யுமாறு தங்களைக் கோருகின்றோம் என்றுள்ளது. (7)